செ.வெ.எண்.47 /2019 நாள்: 25.09.2019

# திருப்பூர் மாவட்டம்

# திருமூர்த்தி அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீரை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் / தலைவர், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி.நிறுவனம் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் திறந்து வைத்தார்.

--------

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து, பாசனத்திற்காக தண்ணீரை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.கே.விஜய கார்த்திக்கேயன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்/ தலைவர், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி.நிறுவனம் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் இன்று (25.09.2019) திறந்து வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் மாவட்ட விவசாய பெருங்குடி மக்களின் கோரிக்கையினை ஏற்று உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பாசன பகுதிகளுக்கு இன்று (25.09.2019) முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட, உடுமலைப்பேட்டை வட்டத்திற்கு 16,146 ஏக்கரும், மடத்துக்குளம் வட்டத்திற்கு 4,626 ஏக்கரும், தாரபுரம் வட்டதிற்கு 19,136 ஏக்கரும், பல்லடம் வட்டத்திற்கு 5,966 ஏக்கரும், திருப்பூர் வட்டத்திற்கு 8,611 ஏக்கரும், காங்கேயம் வட்டத்திற்கு 16,425 ஏக்கரும் என **70,910** ஏக்கரும் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட, பொள்ளாச்சி வட்டத்திற்கு 19,502 ஏக்கரும், சூலூர் வட்டத்திற்கு 3,656 ஏக்கரும் என **23,158** ஏக்கரும் என நான்காம் மண்டல மொத்த பாசன பரப்பிற்கு **94,068** ஏக்கர் பயன்படும் வகையில் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பரம்பிக்குளம், ஆழியாறு திட்டம், பாலாறு படுகை நான்காம் மண்டல பாசன பகுதிகளுக்கு திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்ட கால்வாய்கள் ஆகியவற்றில் இன்று முதல் (25.09.2019) ஒரு குற்றுக்கு 7,600 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மேலும், 250 கன அடி/ வினாடி அளவில் தண்ணீர் திறக்கப்பட்டு இது படிப்படியாக உயர்த்தப்பட்டு கால்வாயின் மொத்த கொள்ளளவான 912 கன அடி/வினாடி அளவிற்கு அதிகரித்து வழங்கப்படும். இதனை விவசாய பெருங்குடி மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொண்டு வேளாண் உற்பத்தியினை பெருக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கரைப்புதூர் ஏ.நடராஜன் (பல்லடம்), திரு.உ.தனியரசு (காங்கயம்), திரு.ப.கந்தசாமி (சூலூர்), மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.ஆர்.சுகுமார், உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இந்திரவள்ளி, திருப்பூர் மாவட்ட ஆவின் சங்க தலைவர் திரு.மனோகரன், திருமூர்த்தி அணை கோட்ட செயற்பொறியாளர் திரு.வே.ஆனந்தன், உதவி செயற்பொறியாளர் திரு.க.காஞ்சித்துரை, உதவி பொறியாளர் திரு.சண்முகம், அரசு அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**